தொழிற்சாலையை அரசு அமைக்க முன் வருமா? அதோடு இதற்குத் தேவையான தண்ணீர் கிடைக்கிறது. அங்கே புஞ்சை நிலங்கள் ஏராளமாக இருக்கின்றன. இதற்காக நஞ்சை நிலங்களை எடுக்க வேண்டிய அவசியம் இல்லை. அந்தக் காரணங்களினால் அங்கே அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூபாய் 180 கோடி அளவுக்கு மதிப்பீடு இருக்கின்ற காரணத்தாலும், ஆயிரக்கணக்கான பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்ற காரணத்தாலும், அந்தத் தொழிற்சாலையை என்னுடைய தொகுதியிலேயே கூட துவங்கினால் நல்லது என்று நான் நினைக்கிறேன். ஆனால் மத்தியில் இருந்து ஒரு குழு வந்து ஆய்வு செய்து புகளூரில் அமைக்க வேண்டும் என்று அறிவித்தாகிவிட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையின் முன் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புகளூர் ரயில்வே ஸ்டேஷன் அருகில் இந்தப் பேப்பர் நிறுவனப் பணி ஆரம்பம் ஆகிவிட்டதா? அதனுடைய எம்.டி. யாக யாரைப் போட்டிருக்கிறார்கள் எந்த அடிப்படையில் போட்டு இருக்கிறார்கள். 'சிம்கோ மீட்டர்' விசுவநாதனை அதில் எம்.டி. யாகப் போடப்பட்டிருப்பது உண்மையா என்று தகவல் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. ரகுமான்கான் அவர்களுடைய கேள்வியின் முதல் பகுதிக்கு ஏற்கனவே நான் பதில் சொல்லிவிட்டேன். இரண்டாவது பகுதிக்கு, எம்.டி. யாக விஸ்வநாதன் நியமிக்கப்படவில்லை.

சேலம் மாவட்டத்திலுள்ள பல்நோக்கு கூட்டுறவு சங்கங்கள்

*வினா எண் 589—திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்திலுள்ள, சேர்வராயன் மலை, ஏற்காடு, கொல்லிமலை ஆகிய இடங்களில் அமைந்துள்ள பல்நோக்குக் கூட்டுறவு சங்கங்களின் (LAMPS) நிர்வாகத்தைச் சீரமைக்கவும் அவற்றின் மூலம் அரிசன மக்களுக்கு நீண்ட காலக் கடன் வழங்கவும் அரசிடம் திட்டம் உள்ளதா?

1981 ஏப்ரல் 1]

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : பெரிய அளவிலான பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் ஆதிதிராவிட மக்களுக்கு நீண்ட காலக் கடன்கள் வழங்கப்படுவது இல்லை. பழங்குடிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள பெரிய அளவிலான கூட்டுறவுச் சங்கங்களில் இதுவரை ஆற்றிய பணிகளை மதிப்பீடு செய்யும்படி கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். அவரது மதிப்பீடு (Report Evaluation) எதிர்பார்க்கப்படுகிறது. அந்த மதிப்பீடு கிடைக்கப் பெற்றவுடன் இச்சங்கங்களை, தேவைப்பட்டால் சீரமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. சீ. சிவப்பிரகாசம் : தலைவர் அவர்களே, இதுவரையில் அந்தச் சங்கத்தில் எத்தனை பேர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள்? எந்தெந்தத் துறையில் என்னென்ன கடன்கள் வழங்கப்பட்டிருக்கின்றன? இதுவரையில் மொத்தம் எவ்வளவு வழங்கப்பட்டிருக்கின்றது?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் உள்ள 4 பெரும் பல் நோக்கு எல்லையில் உள்ள பழங்குடியினர் குடும்பங்களின் எண்ணிக்கை 15,157. இதில் 1980 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 30 ஆம் நாளில் நிறுவப்பட்டதில் இருந்து 12,234 உறுப்பினர்கள் உள்ளனர். இச்சங்கங்கள் வழங்குகின்ற மத்திய காலக் கடனைக் கொண்டு பழங்குடி மக்கள் வாங்கும் உழவு மாடுகள், கறவை மாடுகள் ஆகியவற்றிற்கு 50 சதவீதம் அரசு மானியமாக தருகிறது. கடந்த ஆண்டு 68.28 இலட்சம் ரூபாய் பயிர்க் கடனும், 27.75 இலட்சம் ரூபாய் மத்திய காலக் கடனும், 0.36 இலட்சம் ரூபாய் நுகர்வுக் கடனும் வழங்கி உள்ளது.

திரு. சீ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சங்கங்களை ஆதிதிராவிடர்கள், பழங்குடி மக்களுக்கு புதிய முறையில் கடன்களை வழங்கும் திட்டங்கள் என்னென்ன? எந்தெந்தத் திட்டங்களை அந்தச் சங்கங்கள் செயலாக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழங்குடியினரைப் பொறுத்தவரையில் வேலை வாய்ப்பு மற்றும் உற்பத்தி, வருமானம் ஆகியவற்றை அதிகரிப்பதற்காக கடன் மற்றும் ஒருங்கிணைந்த பிற பணிகளையும் வசதிகளையும் வழங்குவது இந்தப் பெரும் பல் நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் முதன்மையான நோக்கமாகும். ஆதித் திராவிட மக்களுக்கு இந்தப் பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நீண்ட காலக் கடன்கள் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, ஆங்கிலத்தில் லேம்ப்ஸ் (LAMPS) என்று போட்டு இருப்பது எங்களுக்குப் புரியவில்லை. அதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவர் அவர்களே, LAMPS என்பது Large sized Mult purpose Co-operative Soc ty.

பதிவு செய்து பத்தாண்டுகளாகியும் வேலை கிடைக்காதோர் எண்ணிக்கை

*வினா எண் 590—திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்ட வேலைத்தேடித்தரும் நிறுவனங்களில் District Employment (Exc ang s) வேலைக்காக பெயரைப் பதிவு செய்து சுமார் பத்தாண்டுகளாகியும் இதுவரை வேலை வாய்ப்புக்கிடைக்காமல் எண்ணற்ற இளைஞர்கள் அவதியுறுவதை இந்த அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் இக்குறையினை நீக்க அரசு எடுக்கவிருக்கும் துரிதமான நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) மற்றும் (ஆ): வேலைவாய்ப்பகங்களில் செல்லுபடிப் பதிவேட்டில் வேலைக்காக பதிவு செய்து பத்து ஆண்டுகளுக்கு மேல் காத்திருப்பவர்களின் எண்ணிக்கை 30–9–1980-ல் கணக்கிட்ட மொத்த எண்ணிக்கையில் 0·7 சதவீதமாகும். இவர்களுக்கு பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:

1. வேலைவாய்ப்பகங்களில் சுழல் (Rotat on) முறைக்கு மற்றவர்கள் போல் உட்படுத்தப்படாமல் இதர நிபந்தனைகளாகிய வயது மற்றும் கல்வித்தகுதிகளைக் கொண்டிருப்பின் வேலைக்கான காலியிடங்களுக்கு இவர்கள் பெயர்களை பரிந்துரை செய்யப்படுகிறது.

2. இவர்கள் வேலைவாய்ப்பக அதிகாரிகளிடம் தங்கள் பெயரை தகுதியான காலியிடங்களுக்கு உடனடியாகப் பரிந்துரை செய்ய முறையிடலாம்.

3. வேலைவாய்ப்பகங்களில் பதிவு செய்து நீண்ட காலமாக வேலை வாய்ப்பிற்குக் காத்திருக்கும் பதிவாளர்களுக்கு, பணியிலமர்த்தும் முன்னேற்றத்தைத் தொடர்ந்து கவனிக்க ஒரு சிறப்புப் பதிவேடு பயன்படுத்தப்படுகிறது.